௬௨.

கணிதக்கலைப் புலமை தலை சிறந்து விளங்கிய

# இராமாநுஜன் பிள்ளைத் தமிழ்

MADRAS

மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்

மாணாக்கருள் ஒருவரும், (முன்னைப்) பலபாடசாலைப்

பரீக்ஷாதிகாரியும், தொல்காப்பியம் பொருளதிகார—

ஆராய்ச்சி, மாயூரநாதர் அந்தாதி, மாணிக்கவாசகர்

பிள்ளைத்தமிழ், ஸ்ரீசங்கர சற்குரு ஆற்றுப்படை,

அன்புவிடுதூது முதலிய நூல்களின்

ஆசிரியருமாகிய

**வே. முத்துஸாமி ஐயர்** எம்.ஏ., எல்.டி.

இயற்றியது.

இதன் பதிப்புரிமை யார்க்கும் உரியது

1949

இதன் விலை அணா நான்கு

# ஆக்கியோன் முன்னுரை

இந்நூல் இளமையிலேயே கணிதக்கலையிற் பெரும் புலமையடைந்து இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் சர்வ கலா சங்கத்தின் சிறந்த அங்கத்தினராக திகழ்ந்து, நடுப் பிராயத்திற் பரமபதமுற்ற திரு. இராமாநுஜன் மீது பிள்ளைத் தமிழ் என்ற வகையிற் பாடப்பெற்றதாகும்.

2. பிள்ளைத் தமிழ் என்பது பாட்டுடைத் தலைவனைக் குழந்தையாகக் கருதி அவன் அருமை பெருமைகளை அக் குழவிமீதேற்றிப் பலவகைப் பிள்ளை விளையாட்டுக்களின் இயல்புகளை விளக்கிப் பாடுவது. இந்நூலில் மரபுப்படி 10 பருவங் கூறியுள்ளது. ஆனால் பருவத்துக்கு ஒரு கவியே பயின்றுளது.

3. இராமாநுஜனைக் கலாசாலை மாணவனாம் நிலையிற் சென்னையிற் சில முறை 1905—07 இல் நேரிற் கண்ட பேறு எளியேனுக்குண்டு. இவர் எப். ஏ யில் தேர்ச்சியுறாதிருந்தும் கணிதப் புலமையால் முதல்தர எம். ஏ மாணவர்களான நண்பர் பலரை வியக்கவும் மயக்கவும் செய்தனர். இவர் அப்போது கலைப் பொலிவு வீசும் முகப்பொலிவுடன் பேசும் ஆர்வமொழிகளும், தாம் குறித்துள்ள குறிப்புக்களை ஒரு தடி நோட்' டினின்றும் எடுத்துக்காட்டும்போதும் புதுக்குறிப்புக்களைப் பொறித்துக் கொள்கையிலும் காட்டும் பெருக்கமும் கண்டோரை மூக்கில் விரல்வைத்து வியக்கச் செய்யும் காட்சிகள்.

4. இவர் பரீக்ஷை தேறாமையால் எளிய வாழ்க்கைப் போராட்டம் செய்யுமிடையிலும் காட்டிய கலைத் தொண்டின் அருமை இவருக்கு இவருடைய குலதெய்வமாகிய நாமகிரியம்மையார் திரு அருளால், சில உயர்ந்த செல்வாக்குள்ள கணித பண்டிதர்களுடைய உதவியைக் கைகூட்டிற்று, மேனாடு சென்று இவர் இதனால் சீரும் சிறப்புமுற்று, பெரும் புகழ் பெற்றனர்; பெற்றென்? அந்தோ! இவருக்கு இறைவன் குறைவயதே கொடுத்தனன்; இவர் தீராநோயுற்று 33-வயதில் மறைந்தனர். வெண்ணெய் திரண்டெழும்போது தாழியுடைந்ததே என்று நாமெங்கும் ஏங்கலாயிற்று.

5. இந்நூலில் இராமாநுஜத்தின் இளமை வறுமையும், வறுமையிற் செம்மையும், பெற்றோர்பக்தி தெய்வ பக்திகளும், இவரது அபாரக்கலைப் "பித்தும்" மேனாட்டில் இவர் எய்திய பெரும்புகழும் பாராட்டப் பெறுகின்றன.

6. கணிதக் கலையிலும் இராமாநுஜன் புலமையிலும் ஈடுபட்ட ஒருவர் — இப்போது சென்னையில் டெபுடி அகௌண்டண்டு ஜெனரலாக இருப்பவர்—பெயர் குறிக்க வேண்டாம் என்று தடுப்பவர் நான் சென்னை, கோகலே ஹாலில் உ. தி. ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் *"நால்வர் பிள்ளைத் தமிழ்" 1947-இல் அரங்கேற்றுழி, அன்பும் உறவும் கலந்த பண்பினால் இராமாநுஜனைப் பிள்ளைத் தமிழாற் சிறப்பிக்குமாறு வேண்டினர். அதன் பயனாக விளைந்த இச்சிறுநூலை 29—1—49 இல் கும்பகோணம் காலேஜில் 'இராமாநுஜம் நாள்மங்கல விழா'விற் படித்துச் சொல்லக் காலேஜ் தலைவர் இடந்தந்தனர். இவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

7. கண்ணென்னும் கணிதக் கலையும் இராமாநுஜன் புகழும் இறைவன் திருவருளால் என்றும் இனிதே ஓங்குக.

**வே. முத்துஸாமி ஐயர்.**

---

* சம்பந்தர் மீது—உயர்திரு V. S. செங்கல்வராய பிள்ளை M.A. சென்னை;
அப்பர் மீது ,,—செல்வன் மு. கோ. இராமன், அரங்கநாதபுரம்;
சுந்தரர் ,,—பிர்மஸ்ரீ கவிராஜ பண்டித நா. கனகராஜ ஐயர், புதுவை;
மணிவாசகர் ,,—வே. முத்துஸாமி ஐயர், M.A.,L.T., அரங்கநாதபுரம்.

உ

# இராமாநுஜன் பிள்ளைத் தமிழ்

——(o)——

## வலம்புரி விநாயகர் துதி.

**ஆன்ற கணிதத் [1]தகணித நுண்புலமை**
**சான்ற இராமாநு ஜற்கெளியேன் — ஏன்ற**
**பிள்ளைத் தமிழ்க்குதவும் பேரார் [2]வலம்புரிக்கை**
**வள்ளற் கணபதிமுன் வந்து.**

## 1. காப்புப் பருவம்

[கடவுளர் குழந்தையைக் காக்க எனல்]

கருமா முகில்போல உருவுந் திருவுங்
காட்டுந் திருமாலைக்
கவினுர் மார்பில் மணிபோற் குலவும்
காமர் [3]பெருந்திருவைப்
பெருமா வீரம் பொலியும் சிறிய
[4]பெரிய திருவடியைப்
பிறங்கும் அருள்சேர் சேனைமுதலிப்
பேரார் முன்னவனைத்
திருமால் கரத்தில் வலத்தே நிலைத்துத்
திகழ்ந்தெந் நல்லோர்க்கும்
சேமம் அருளிச் செறுநர்ச் செகுக்கும்
[5]திருவா ழித்தேவை
[6]அருமா மொழிபார் தருபன் னிருபேர்
ஆழ்வார் தமைப் பணிவாம்
ஐயன் **இராமா நுஜ**நன் மகவை
அன்பிற் புரக்க வென்றே.

---

[1]அகணித - கணக்கில்லாத; [2]வலம்புரி - வலது புறம் சுழித்த; பலத்தைச் செய்கின்ற என்றுமாம். [3]பெருந்திரு- மகாலக்ஷ்மி: [4]பெரிய திருவடி - கருடன்; சிறிய திருவடி - அநுமன்; [5]ஆழித்தேவு - சக்கரத்தெய்வம் - சுதரிசனர் எனப்படுவர்; [6]அருமா மொழி - திருவாய்மொழி.

## 2. செங்கீரைப் பருவம்.

[முகத்தை அசைத்து ஆடும்படி வேண்டல்]

[1]எண்ணெண கலையில் எவர்க்குங் கண்
என்ன இலகெண் எழுத்தினிலே
ஏற்ற முதலா அமை கணித
இயலில் மேனாட் டறிஞர்கள்
எண்ணி எண்ணி முயன்று முயன்(று)
எய்துஞ் சின்னூற் றாண்டுகளா
இணைத்த முடிவெல் லாம்ஐயா!
இளைஞ ரொடுநூல் பயில் போதே
நுண்ணென் மாண்பு நுழை புலத்தால்
நுவலற் கரும்பே ரூக்கத்தால்
நுந்தும் அருள்சேர் [2]நாமகிரி
நோக்கால் நுனித்தே ஆய்பெருமை
நண்ணும் **இராமா நுஜப்** பேரார்
நம்பீ! ஆடுக செங்கீரை;
நலமாம் **இராமா நுஜப்** பேரார்
நம்பீ! ஆடுக செங்கீரை.

## 3. தாலப் பருவம்.

[தாலாட்டுப் பாடல்]

பசுவாய் திறப்ப ஒளிகண் வீசப்
பரந்த குஞ்சியி னிற்
படிந்த வுடையிற் படிறு தவழப்
பரூஉக் கைப் புத்தக மும்
நெகுசீர் அகமும் தகவும் உடையாய்!
நீள்கணி தம் வல் லார்

---

[1] 64 கலைகளில் எண்ணும் எழுத்தும் இருகண்கள். இவற்றிலும் எண்ணே முதலாயது. [2] நாமகிரி - நாமக்கல்லில் எழுந்தருளியிருக்கும் இவர் குலதெய்வம்.

நீசென்னை யில்மா ணவனு விரிக்கும்
 [1]நெடுந் தொகை வியந்தனர் ; பேர்
மிகுநல் [2]அரசச் சங்கத் தங்கம்
 விளங்கு முதலோ னே !
மேலாங் கேம்பிரிட்ஜ் திருநிதி நிலயம்
 மெச்சும் உறுப்பாளா !
தகும் எண் கலைக்காம் கண்ணுள் மணியே !
 தாலோ தாலே லோ ;
தழைக்கும் இராமா நுஜ நன் நாமா !
 தாலோ தாலே லோ.

## 4. சப்பாணிப்பருவம்.

[கைகொட்டி ஆடவேண்டல்]

[3]பித்தர் பேதையர் பத்த ரென்பார்
 பெருமை எங்ஙன் அளப்பதெனப்
பெரிய கல்விக் கவிக் கம்பன்
 பேசிப் போந்த உண்மை இந்நாள்
அத்த ! கணிதக் கலைப்பித்தோ(டு)
 அயலொன் றறியாப் பேதைமையும்
ஆழ்ந்தே அதன்மாட்டுள்ள மிக
 ஆர்ந்த பத்திப் பொலிவுமுன்பால்
மெத்த இயைதல் கண்டுவந்தேம் ;
 மேவுன் கலைச்சீர் விரிக்கறியேம் ;
மேலாஞ் சிவனும் பித்தனென்றால்
 மிக்க மாட்சி பெற்றனையே.

---

[1] நெடுந்தொகை - Infinite Series [2] அரசச் சங்கம் - Royal Society. இவரே இந்தியாவில் F. R. S. பட்டம் முதற்கண் பெற்றவர். [3] 'பித்தர் சொன்னவும்... பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ'—கம்பர்.

புத்தம் புதிய புகழ்வளரும்
புனிதா! கொட்டு கசப்பாணி;
புகல்ரா மாநு ஜப்பேர் கொள்
புனிதா! கொட்டு கசப்பாணி.

## 5. முத்தப் பருவம் [முத்தந் தரும்படி வேண்டல்]

தேற்று கணிதக் கலைய கணிதத்
திறமை சேரு மதியனே!
சிறிய வயதிற் பெரிய புலமை
திகழும் அரிய நிதியனே!
வேற்று வழியி லுளமுட் புகுதா
விநய குணசம் பன்னனே!
விரவு பொறையும் விரியு நிறையும்
மிளிரு கணித மன்னனே!
ஆற்றும் நினது பணியி னிடைமெய்
அவம திப்பும் கவலையும்
அரிய பசியுந் துயிலும் அறியாய்;
கரும மேகண் ணுயினுய்!
போற்று கணித நிலையில் நிகரில்
புலவ! முத்தந் தருகவே;
பொருவில் இராம அநுஜ னெனும்மெய்ப்
புலவ! முத்தந் தருகவே.

## 6. வாரானைப் பருவம். [வா வா என அழைத்தல்]

இறையருள் மிகவுறுந் தகவுடையர் வாழ்வினில்
இடையிடை யருஞ்சோதனை
எய்துவர்; எய்தினும் இனியமன ஞ் சோர்கிலர்;
இவர்க்குநற் றுணைகள் வாய்க் கும்
நிறையஎன் பதற்கேற்ப நினதுகட் டிளமையில்
நீபணி தேடிச் சென்னை

நீணகரி லலேவுற்று நேர்பணிபெருதுளம்
நிலேகலங் கிடவும் வாடா(து)
உறைவுழி [1]இர்ராம்சாமி ஐயர் ராம் சந்த்ரராவ்
உயர் சேஷு ஐயருட னே
ஓங்கு நா ரண ஐயர் ஹார்டியால் மேனுட்டில்
உற்றுமேல் நாட்டம் உற்ருய்;
இறையுமெண் கலேத்தேவி இணேயடியை மறவாத
இராமாநு ஜா! வருக வே;
இருமரபு விளங்கவரும் அருமணி விளக்கெனும்
இராமாநுஜா வருக வே.

7. அம்புலிப் பருவம். [அம்புலியை ஆடற்கழைத்தல்]

அம்பரம் வருபிறை மதியநீ கலேயுளாய்
ஆதலின் சிறிதிங் குவமை
ஆகுவாய் என்னினும் அகங்கரித் திடற்க; உன்
அகங்கரிய தாகும்; இன்னும்
பம்புமுன் கலேதேயும்; இவனுளே மாசிலான்;
பரவுகலே உலகமோங்கும்;
பாரமதி யுனக்கில்லே, பேர்மதியென்ருனதே,
பரமஅப சாரன் நீயே;
இம்பர்இச் சீர்மதியன் தேர்மதியன் பேர்மதியன்
எம்மதியர் மதியு முள்ளான்;
இங்குறிற் கலேபெறுவை; இல்லேயேல்நாமகிரி
இவன்குலத் தேவொறுக்கும்;

---

[1] V. ராமஸாமி ஐயர், P. C. S. டிப்டி கலெக்டர்; M. ராமசந்திர ராவ், Dt. Collector; P. V. சேஷு ஐயர், Professor of Math., Presy. College; நாராயண ஐயர், Manager, Madras Port Trust; Hardy, Cambridge Professor.

[1]அம்புவியில் விளையாடற் களைத்தனன் இவனுடன்
அம்புலீ ! ஆடவாவே ;
அன்புறு கலைச்சிங்க வன்பிரா மாநுஜனோ(டு)
அம்புலீ ! ஆடவாவே.

## 8. சிற்றிற் பருவம்.

[விளையாட்டு வீட்டைக் கலைக்காமை வேண்டல்]

சீராக் குடந்தைக் காலேஜில்
தேர்ந்தா யில்லை முதல் வகுப்பும் ;
சென்னைச் சருவ கலாசங்கம்
சேரும் முதற்றேர் வுறவில்லை ;
நீராக் கவலைக் கொடுவாழ்க்கைச்
சிற்றா தியத்துச் செல்வநிலை
தெரிக்கும் சாலை கரைகப்பல்
சேரும் சாலை உழன்றதனைப்
[2]பாராத், திருவூர் டீமுதலோர்
பகரச், சென்னை கேம்பிரிட்ஜில்
பராவு கலைச்சங் கஞ்சார்ந்தே
பாரோர் புகழக் கணக்கிலுறும்
தேராச் சிக்கல் பலசிதைத்தாய் ;
சிறியேம் சிற்றில் சிதையேலே ;
[3]தெருளார் இராமா நுஜ! அருளாற்
சிறியேம் சிற்றில் சிதையேலே.

## 9. சிறு பறைப் பருவம்.

[சிறு பறை முழக்க வேண்டல்]

முன்பு நல்குர விடையுன்னை
முதுதாய் தந்தையர் தாங்கியதை

---

[1] சாம பேத தான தண்டம் இதில் கூறியுள்ளது.
[2] பாரா - பார்த்து; [3]தெருள் - அறிவு.

முன்னி நீபெறும் பொற்றொகையில்
முதற்கண் அவர்க்கொரு கூறிட்டே
பின்பெஞ் சியதொடு மேனுடு
பேணிப் புக்கனை; இவ்வாறு
பேற்றோர்ப் பேணுவ தரிதம்மா!
பெரிய மதிநலம் யெற்றாலும்;
அன்பிற் குழவியை யன்னவன் நீ;
அயல்நா டுற்றவண் அரும்புலவர்க்கு
[1]அகநக நட்பின ஞஅமர்ந்தாய்;
அரிய நினது கலைப்புகழால்
[2]தென்பாற் பாரதம் சீர்திகழும்
செல்வா! முழக்குக சிறுபறையே;
தேச முழங்கிரா மாநுஜப் பேர்ச்
செல்வா! முழக்குக சிறுபறையே.

## 10. சிறுதேர்ப் பருவம்.

[சிறுதேர் உருட்ட வேண்டல்]

பொருளூறு சீர்வர வருபசி தீர்வுறப்
புகலெங் கேகாண் பேன்
போம்வழி யறிகிலன் எனக்கவல் காலையிற்
போற்றத் தகுமே லோர்
மருளற நீதரு கலைநலங் கண்டுனை
மாண்பார் சென்னை நகர்
வருகலைச் சபையில் இங்க் லாந்தினில் கேம்ப்ரிட்ஜ்
வளர்கலைக் கழகத் தில்

---

1 'அகநக நட்பதே நட்பு' - திருவள்ளுவர்;

2 தென்பாற் பாரதம் - தென்னிந்தியா.

இருள்தெறு பதவி யளித்தலும் சாகரம்
எங்ஙன் கடத்த லென
ஏங்கையில் கனவிடை நாமகி ரித்திரு
எதிர்நிலை காட்டினள்; அத்
[1]தெருள்மகள் சேவடி பரவிரா மானுஜ!
சிறுதே ருருட்டுக வே;
தேங்கமழ் [2]தாமரை தாங்குபு யாசல!
சிறுதே ருருட்டுக வே.

## மங்கல வாழ்த்து

வாழிய கீழ்நாடு வாழிய மேனடு
வாழிகலைச் செல்வம் வளமுற்று—வாழியுல(கு)
ஒற்றுமை வாழி உயர்கணிதம் வாழிசீர்
பெற்றஇரா மாநுஜன்நற் பேர்.

முற்றிற்று

---

[1] தெருள் மகள்-ஞானஸ்வரூபி; [2] தாமரை-அந்தணர்க் குரிய மலர்; புய அசல-அசலம்(மலை)போலும் புயத்தாய்.

# இந்நூலாசிரியர் இயற்றிய நூல்கள்.

1. பத்மினி ; இண்டர் வகுப்புக்குப் பாடமானது. அணா 12
2. தொல்காப்பியம் பொருள் அதிகார ஆராய்ச்சி; பி. ஏ. மாணவர்களுக்குப் பாடமானது. 6
3. விநாயகர் துதிப்பாக்கோவை 62 விநாயகர் துதிப்பாடல் கொண்டது ; குறிப்புக்களுடன் ... 4
4. முருகன்துதிப்பாக் கோவை ; 108 துதி கவிகள் 4
5. ஆசிரியர் துதிப்பாக் கோவை ; வித்யா குரு மகாமகோபாத்யாய டாக்டர் சாமிநாதையரவர்கள் மீதும், ஞானகுரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் மீதும் பாடிய 250 பாடல் கொண்டது ; ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் முன்னுரையுடன் கூடியது. குறிப்புக்களுடன். ... 8
6. மாயூரநாதர் அந்தாதி ; 100 கவிகள் குறிப்புக்களுடன் ... 4
7. ஸ்ரீ சங்கர சற்குரு ஆற்றுப்படையும் அன்புவிடு தூதும் ; குறிப்புக்களுடன் ... 4
8. பாதுகை நூற்றெட்டு ; ஆதி சங்கரர் பாதுகைமீது 108 பாடல்கள் ; குறிப்புகளுடன் ... 4
9. நால்வர் பிள்ளைத் தமிழ் (மாணிக்கவாசகர்) ... 4
10. கதையும் பாட்டும் ; இரண்டு பாகம்; தனித்தனி. ... 3

---

நூலாசிரியர் மைந்தன் மு. கோ. இராமன் இயற்றியவை.

1. நால்வர் பிள்ளைத் தமிழ் (அப்பர் சுவாமிகள்); (சைவப் பெரியார் ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் மதிப்புரை பெற்றது.) 4
2. காந்தியடிகள் பிள்ளைத் தமிழ் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் Dr. A. சிதம்பரநாத செட்டியார் அவர்கள் முன்னுரை பெற்றது. 4
3. தஞ்சைப் பெருவுடையார் மாலை ; பிருகதீசப் பெருமான்மீது 30 துதிகள் கொண்டது. (அச்சில்) 4

வேண்டுவோர்:—

**வே. முத்துஸாமி ஐயர்**, எம். ஏ., எல். டி.,
திராவிடக் கவிமணி, அரங்கநாதபுரம்,
திருக்காட்டுப்பள்ளி போஸ்டு.
என்னும் விலாசத்துக்கெழுதிப் பெறலாம்.

---

Sri Mahabharatham Press, Kumbakonam. January 49; - Copies 200

10228 MADRAS